# ஈஸ்டர் தாக்குதலை ஊக்குவித்தவர்களை காப்பாற்றும் முயற்சியில் மௌலானா – பிள்ளையான் குற்றச்சாட்டு!



குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புபடுத்தி தன்னுடைய பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இன்றைய தினம் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

உயித்தஞாயிறு தற்கொலைக் குண்டுத்தாக்குதல் எவராலும் ஏற்றுக்கொள்ளமுடியாத தாக்குதல் சம்பவம் என அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த குண்டுத்தாக்குதலை ஐ.எஸ் அமைப்பினரே மேற்கொண்டனர் என அதன் தலைவர் தெரிவித்திருந்தார். ஐ.எஸ் அமைப்பின் உத்தியோகப் பூர்வ இணையத்தளத்திலும் அவர்கள் உரிமை கோரியிருந்தனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்கொலைக் குண்டுத்தாக்குதல் எதற்காக மேற்கொள்ளப்பட்டது என்பது தொடர்பிலும் எந்த நோக்கத்திற்காகச் செய்யப்பட்டது என்பது தொடர்பிலும் அறிவிக்கப்பட்டிருந்தது எனவும், எவ்வாறாயினும் அசாத் மௌலானா வெளிநாட்டில் தஞ்சம் கோருவதற்காக இதனை மறுபக்கம் திருப்புவதற்கு முயற்சிப்பதாக தான் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மதத்திற்காக மரணிப்போம், என சத்தியபிரமாணம் செய்த சிலர் சிறையிலும் வெளியிலும் இருக்கின்றார்கள் எனவும், அவர்களை மரணிப்பதற்கு ஊக்குவித்த பின்னணியில், சில மத நிறுவனங்களும், அரசியல் சக்திகள், மற்றும் சர்வதேச சக்திகள் காணப்படுகின்றன எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இவர்களைக் காப்பாற்றுவதற்காக அசாத் மௌலான மேற்கொண்டுள்ள பலத்த முயற்சியே சனல் -4 நிறுவனத்திற்குச் சாட்சியமளிப்பாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார். (க)


மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 18 புதன்கிழமை 06.09.2023 கதிர் 66



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!

A new brand from Jaffna!

பூ ஆடை

Poo Aadai

ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்


# தயாசிறியின் பதவி பறிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து தயாசிறி ஜயசேகர நீக்கப்பட்டுள்ளார். அத்துடன், அவரின் கட்சி உறுப்புரிமையும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான கடிதம் நேற்று இரவு தனக்கு கிடைத்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இதன்படி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் செயலாளராக கடமையாற்றிய சரத் ஏக்கநாயக்க, ஸ்ரீலங்கா



சுதந்திரக் கட்சியின் புதிய பொதுச் செயலாளராக நியமிக்கப்பட உள்ளார் என அறியமுடிகிறது.

கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் தமக்கு 2▶

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் இன்று ஆரம்பமாயின





கொக்குத்தொடுவாய் மனிதப் புதை-குழிப் பகுதிக்கு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க 2▶

# ஒளிபரப்பானது சனல்- 4 ஆவணப்படம் பகிரங்கப்படுத்தப்பட்ட இரகசியங்கள்!

## கோட்டாவைக் கொண்டுவர நடந்த சதி

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினமான ஏப்ரல் 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் சனல்-4 தொலைக் காட்சியினால் ஆவணப் படக் காணொளி ஒன்று ஒளிபரப்பட்டுள்ளது.

"Sri Lanka's Easter Bombings – Dispatches" என்ற பெயரில் குறித்த ஆவணப்படம் இலங்கை நேரப்படி இன்று அதிகாலை 3.35 மணி அளவில் ஒளிபரப்பட்டது.

இதில், ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னணி தொடர்பில் ஹன்சீர் அசாத் மௌலானா தகவல்களை வழங்கியுள்ளார். அத்துடன் பெயர் வெளிப்படுத்தப்படாத முன்னாள் அரச அதிகாரி ஒருவரும் இதில் தகவல் வெளியிட்டுள்ளார்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 தாக்குதலை மேற்கொண்ட நபர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்கள் பற்றி குறித்த ஆவணப் படத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக கிட்டத்தட்ட 50 நிமிடங்கள் 2▶

# லாப் சமையல் எரிவாயு விலைகளிலும் மாற்றம்!

இன்று நள்ளிரவு முதல் லாப் எரிவாயு சிலிண்டரின் விலைகளும் உயர்த்தபடவுள்ளன.

இதன்படி 12.5 கிலோ கிராம் எடை கொண்ட லாப் எரிவாயு சிலிண்டரின் விலை 145 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 3,835 ரூபாவிற்கும், 5 கிலோ கிராம் லாப் எரிவாயு சிலிண்டரின் விலை 59 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு 1,535 ரூபாவிற்கும் விற்பனையாகவுள்ளதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது. (04)

# தோல்வி பயத்தால் அரசாங்கம் தேர்தலை நடத்தாது - கம்மன்பில!



தோல்வி பயம் காரணமாக அரசாங்கம் தேர்தலை நடத்தாது, என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்ரமசிங்கவும் அவருடைய மாமாவான ஜே.ஆர். ஜயவர்தனவும் தேர்தல் நடத்தாமல் தேர்தல் 2▶

# தயாசிறியை கட்சியில் இருந்து நீக்கவில்லை - மைத்திரி தகவல்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவைக் கட்சியில் இருந்து நீக்கவில்லை என்றும் கட்சியில் அவரின் அங்கத்துவத்தைத் தற்காலிகமாகவே இடைநிறுத்தியுள்ளதாகவும் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

என்னை தலைவர் பதவியில் இருந்து நீக்குவது தொடர்பாக இன்று வழக்கு ஒன்று 2▶

# பொதுமக்கள் முன்வைத்த 11,000 முறைப்பாடுகள் உடனடியாக விசாரிப்பதற்கான வேலைத் திட்டம்

மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக பொதுமக்களால் முன்வைக் கப்பட்ட 11,000 இற்கும் அதிகமான முறைப்பாடுகளை உடனடியாக விசாரிப் பதற்கான வேலைத் திட்டத்தினை முன் னெடுத்துள்ள தாக மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள் ளது.

அத்துடன், கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளில் சிலவற்றை பொதுச் சேவை ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக் குழு, தொழில் திணைக்களம், நுகர்வோர் விவகார அதிகார சபை ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கவுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இவ்வாறு அனுப்பி வைக்கப்படும் முறைப்பாடுகள் உரிய நிறுவனங்களால் சரியான முறையில் விசாரணை செய்யப்படுகின்றனவா எனக் கண்காணிக்கப்படுமென மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணை யாளரும், சட்டத்தரணியுமான நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

அத்துடன் கிடைக்கப்பெற்றுள்ள அனைத்து முறைப்பாடுகளையும் உடனடியாக விசாரணை செய் வதன் மூலம், மக்களுக்கான நீதியை நிலைநாட்ட முடி யும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## கொக்குத்தொடுவாய் மனிதப் ......



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிபர் சி.குணபாலன் ஆகியோர் களப்பயணம் மேற் கொண்டு பார்வையிட்டிருந்தனர்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு பணிகள் நேற்றைய தினம் தீர்மானிக்கப்பட்டதற்க மைய இன்று காலை 8 மணியளவில் ஆரம்பமாகி இடம்பெற்றன.

குறித்த மனிதப் புதைகுழி அகழ்வுப் பணியானது முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன், தொல்பொருள் சிரேஸ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ, முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி செ.பிரணவன், சட்டத்தரணிகளான ரணித்தா ஞானராசா, வி.கே.நிறஞ்சன், கொக்குளாய் காவல் நிலையப் பொறுப்பதிகாரி, கிராம சேவையாளர், தடயவியல் காவல் அதிகாரி, விசேட அதிரடிப் படை யினர் முன்னிலையில் நடைபெற்றது.

நிலைமைகளை அவதானிப்பாளர்களாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், தமிழரசு கட்சி இளைஞர் அணியை சேர்ந்த பீற்றர் இளஞ் செழியன், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கி.சிவகுரு ஆகியோர் சம்பவ இடத்தில் இருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியிலே கடந்த 2023.06.29 அன்று தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையினர் நீர் குழாய்கள் பொருத்துவதற்காக நிலத்தைத் தோண்டியபோது அங்கு மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

இதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு நீதவான் நீதி மன்றத்தில் இடம்பெற்ற வழக்கு விசாரணையின் பின்னர் இன்று அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (க)

## தயாசிறியின் பதவி பறிப்பு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக சரத் ஏக்கநாயக்க வும் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் தயாசிறி ஜயசேகர பங்கேற்றிருந்தார். கட்சி இனி ஒற்றுமையாகப் பயணிக்கும் எனவும் அவர் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## தோல்வி பயத்தால் அரசாங்கம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பத்திரங்களை ஒதுக்கி வைப்பதில் கின்னஸ் சாத னைக்கு நிகராக சாதனை படைப்பவர்கள்.

அவர்கள் தேர்தலை நடத்தமாட்டார்கள். காரணம், அரசாங்கம் தோற்பதில் அவர்களுக்கு விருப்பம் இல்லை. நாம் தான் நடத்த வைக்க வேண்டும். தேர்தல் நடத்தும் வரையில் எங்கள் போராட்டத்தை நிறுத்தமாட்டோம்.

நாங்கள் தேர்தலுக்குத் தயாராக இருக்கின்றோம். அரசாங்கம் தயாராக இல்லை, எனவும் அவர் தெரி வித்தார். (04)

## தயாசிறியை கட்சியில் இருந்து .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இருக்கின்றது. அதேபோன்று பல சிக்கல்கள் இருக் கின்றன. அவை குறித்து வெளிப்படையாக கூறுவதற்கு தற்போது நான் விரும்பவில்லை. பொதுச்செயலாளர் பதவி இன்றி வேறு எந்தப் பதவிக்கு வேண்டுமானாலும் அவரைக் கட்சியில் சேர்த்துக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கின்றோம். கட்சியில் அவருடைய அங்கத்துவம் தற்காலிக மாகவே இடைநிறுத்தப்பட் டுள்ளது. அவர் எங்களுடன் உடன்பாடுகளுக்கு வந்து ஒத்துழைப்பாரா யின் அவர் மீண்டும் இணைந்துக் கொள்ள முடியும், என்று அவர் தெரிவித்துள்ளார். (04)

## ஒளிபரப்பானது சனல்- .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒளிபரப்பப்பட்ட குறித்த நிகழ்ச்சியில் பிள்ளையான் குழுவில் ஊடகப் பேச்சாளராகப் பணியாற்றிய அசாத் மௌலானா முக்கிய தகவல்களை முன்வைத்திருந்தார்.

ஆசாத் மௌலானா என்ற குறித்த நபர், இலங்கை யில் பல்வேறு நிதிக் கையாளுகைக் குற்றச்சாட்டுக்க ளுக்கு உள்ளாகி தற்போது சுவிட்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளவர் ஆவார்.

தம்மால் முன்வைக்கப்படும் தகவல்கள் முற்றிலும் உண்மை எனவும் இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அசாத் மௌலானா சுட்டிக்காட்டியுள்ளார்.

உளவுத்துறை அதிகாரி சுரேஷ் சாலேவுக்கும், ஐ.எஸ் ஐ.எஸ் அமைப்புடன் இணைந்த தாக்குதல்தாரி-களுக்கும் இடையில், ஒரு சதித்திட்டம் தீட்டுவதற்காக, தான் 2018 இல் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தாக்குதல் என்பது ஓரிரு நாட்களில் செய்யப்பட்ட திட்டம் அல்ல எனவும் திட்டம் இரண்டு, மூன்று ஆண்டுகளாகத் தயாரிக்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சனல் - 4 இல் ஒளிபரப்பான இந்த நிழ்ச்சியின் ஊடாக, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச வுக்கு எதிராக நீண்ட விமர்சனங்கள் முன்வைக்கப் பட்டுள்ளதோடு, பல்வேறு குற்றச்சாட்டுகளும் எழுப்பப் பட்டுள்ளன.

விசேடமாக, லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பான விடயங்களுக்கு இந்தக் காணொளியில் அதிகளாவான நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்தக் காணொளியில், பிள்ளையான் குழுவு டன் இணைந்து ட்ரிபொலி பிளட்டூன் என்ற ஆயுதக் கும்பலை உருவாக்குவதற்கு அப்போதைய அரசாங் கம் நடவடிக்கை எடுத்திருந்ததாகவும், அவர்களை ஊடகங்களை அடக்குவதற்கும் எதிரணியினரை அமைதிப்படுத்தவும் பயன்படுத்தியதாகவும் அஅசாத் மௌலானா தெரிவித்திருந்தார்.

இங்கு ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான உண்மைத் தகவல்களுக்காக, கானியா பிரான்சிஸ் வெள்ளை வான் கடத்தல் குற்றச்சாட்டின்போது நாட்டை விட்டுத் தப்பிச் சென்ற குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் சிரேஷ்ட அதிகாரி நிசாந்த சில்வா, வெள்ளைக் கொடி வழக்கின் சாட்சியாக இருந்த ஊடகவியலாளர் பிரடெரிகா ஜோன்ஸ், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரான லசந்த விக்ரமதுங்கவின் சகோதரர் லால் விக்கிரமதுங்க மற்றும் பெயர் குறிப்பிடப்படாத வேறு சில நபர்களின் அறிக்கைகளும் பயன்படுத்தப்பட்டிருந்தன.

அதேநேரம், குறித்த காணொளியில் கொழும்புப் பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலுள்ள அம்பிகா சத்குண நாதன் மற்றும் முன்னாள் இராஜதந்திர அதிகாரி சரத் கொங்கஹகே ஆகியோரின் வாக்குமூலங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பிள்ளையானின் அறிவுறுத்தலின் பேரில் கடந்த 2018 ஜனவரி மாதம் புத்தளம் கரடிப்புல் பகுதியில் உள்ள தென்னந்தோப்பில், அப்போதைய இராணுவப் புலனாய்வு பிரிவின் தலைவர் சுரேஸ் சாலே மற்றும் தௌஹீத் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு இடையில் சந் திப்பொன்றை ஏற்பாடு செய்வதற்கு தான் நடவடிக்கை எடுத்ததாகவும் அதில் சஹ்ரான் உள்ளிட்ட 6 தௌஹீத் ஜமாஅத் உறுப்பினர்கள் கலந்துக்கொண்டதாகவும் அசாத் மௌலானா தெரிவித்திருக்கிறார்.

மேலும், குறித்த சந்திப்பின் முடிவில் தன்னி டம் வந்த சுரேஸ் சாலே, ராஜபக்சர்கள் ஆட்சிக்கு வருவதற்காக நாட்டில் பாதுகாப்பற்ற ஒரு சூழலை உருவாக்க வேண்டும் என்று தன்னிடம் கூறியதாக அவர் குறிப்பிட்டார்.

பின்னர் 6 மாதங்களில் தாம் நாட்டை பாதுகாப்பான நிலைக்குக் கொண்டு வருவதாகவும் அவர் உறுதிய ளித்ததாக அசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், சனல்- 4 செய்திச் சேவைக்காக ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் குறித்த ஆவணப்படத்தைத் தயாரித்த பேஸ்மென்ட் பிலிம்ஸ் நிறுவனத்தின் 'பென் டி பயர்' இடம் புலனாய்வுச் சேவையின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஸ் சாலே தொடர்பாகக் குறித்த ஆவணத் தயாரிப்பிற்குத் தகவல் வழங்கியவர்களால் நான்கு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மேஜர் ஜெனரல் சுரேஸ் சாலே, குறித்த கேள்வி களுக்கு பதில் கடிதம் அனுப்பியுள்ளதுடன் தன் மீதான குற்றச்சாட்டுக்களையும் மறுத்துள்ளார். இது தொடர்பான காணொளியும் சனல் -4 இல் ஒளிபரப்பப்பட்டுள்ளது. (க, 04)




உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

## அபுதாபி – கட்டுநாயக்க நேரடி விமான சேவை!

அபுதாபி மற்றும் கட்டுநாயக்கவுக்கு இடையிலான நேரடி விமான சேவையை ஆரம்பிக்கவுள்ளதாக அபுதாபியின் எயார் அரேபியா விமான சேவை அறிவித்துள்ளது.

அபுதாபி சர்வதேச விமான நிலையம் மற்றும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு இடையில் குறைந்த கட்டணத்தில் முன்னெடுக்கப்படும் இந்த விமான சேவை, அடுத்த வருடம் ஜனவரி 3 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. வாராந்தம் மூன்று விமான சேவைகளை முன்னெடுக்கவுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, புதன், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அபுதாபியிலிருந்து கட்டுநாயக்கவுக்கும், திங்கள், வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் கட்டுநாயக்கவிலிருந்து அபுதாபிக்கும் விமான சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த நிலையில், எயார் அரேபியா தமது சேவையை விஸ்தரிக்கும் 34ஆவது பயண இலக்காக கட்டுநாயக்க அமைந்துள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (க)

## ஒரேயொரு மயக்க மருந்து நிபுணரும் வெளியேறினார் எம்பிலிபிட்டிய பொது வைத்தியசாலை இக்கட்டில்




எம்பிலிபிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையில் இருந்த ஒரேயொரு மயக்க மருந்து நிபுணரும் கடந்த வெள்ளிக் கிழமை முதல் அதிகாரிகளுக்கு அறிவிக்காமல் வைத்திய சாலையை விட்டு வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலை நிர்வாகத்துக்கு அறிவிக்காமல் அவர் வைத்தியசாலையை விட்டுச் சென்றுள்ளதாக எம்பிலிபிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் நிர்வாகக் குழுவின் பிரதம அமைப்பாளர் ஆர்.எஸ்.குணசேன தெரிவித்துள்ளார்.

எனினும், குறித்த மயக்க மருந்து நிபுணர் மீண்டும் பணிக்கு வரமாட்டார் என அவரின் தந்தை என கூறிக்கொள்ளும் நபர் ஒருவர் வட்ஸ் அப் செய்தி மூலம் வைத்தியசாலை அதிகாரிகளுக்கு அறியப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலையில் உள்ள ஒரேயொரு மயக்க மருந்து நிபுணர் வெளியேறியதால் இரண்டு அறுவை சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவின் பணிகள் என்பன முற்றிலும் முடங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதன்படி சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்கள் கராப்பிட்டிய மற்றும் இரத்தினபுரி போதனா வைத்தியசாலைகளுக்கு மாற்றப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (க)

## தேசியப் போட்டிக்குத் தெரிவானது விபுலானந்தாவின் ஹொக்கி அணி



(வி.ரி.சகாதேவராஜா)

கல்வி அமைச்சு நடாத்துகின்ற தேசியப் பெருவிளையாட்டுப் போட்டிக்கு, கிழக்கு மாகாண சம்பியனான காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியின் ஹொக்கி அணி தெரிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற மாகாணமட்ட இறுதிப்போட்டியில், அம்பாறை டி.எஸ்.சேனநாயக்க பாடசாலை ஹொக்கி அணியை எதிர்த்து விளையாடிய காரைதீவு விபுலானந்தா அணி, மூன்றுக்கு இரண்டு என்ற கோல் அடிப்படையில் மாகாணச் சம்பியனாகத் தெரிவாகியிருந்தது.

பாடசாலை அதிபர் மயில்வாகனம் சுந்தரராஜன் வெற்றி பெற்ற வீரர்களையும் பயிற்றுவித்தவர்களையும் பாராட்டினார்.

2023 ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண மட்ட பெருவிளையாட்டு போட்டிகளில் ஹொக்கி சுற்றுப் போட்டியின் முதலாவது போட்டியில் ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய அணியை ஒன்றுக்கு பூச்சியம் என்ற கணக்கில் வெற்றி பெற்ற காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி அணி, அரை இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு மயிலம்பாவெளி வித்யாலயத்தினை இரண்டிற்கு பூச்சியம் என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றிருந்தது.



## மருத்துவ, பொறியியல் துறைகளுக்கு தெரிவான விபுலானந்தா மாணவர்கள் அதிபருடன் சந்திப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

2022 ஆம் ஆண்டிற்கான க. பொத. உயர்தரப்பரீட்சையில் மருத்துவம் மற்றும் பொறியியல் துறைக்கு தெரிவு செய்யப்பட்ட காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி மாணவர்கள் நேற்று பாடசாலைக்கு வருகை தந்து அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

அதன்போது அம்மாணவர்களை பாடசாலை அதிபர் எம்.சுந்தரராஜன் பாராட்டிக் கௌரவித்தார்.

மருத்துவத்துறைக்குத் தெரிவான எம்.குவேந்திரன்-3 ஏ, ஜி.அக்சயி - 3 ஏ, பொறியியல்துறைக்குத் தெரிவான ஏஸ்.கிதுஷாந்த்- 3 ஏ, பி.அனோஜா- ஏ,2 பி, ஐ.திலக்ஷினி - 3பி ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் கணிதவிஞ்ஞானத் துறைப் பகுதித் தலைவர் ஆசிரியர் பி.கேதீஸ் உடனிருந்தார். கடந்த முறை நடைபெற்ற உயர்தரப் பரீட்சையிலும் இப்பாடசாலையிலிருந்து 4 பேர் மருத்துவத் துறைக்கும் ஒருவர் பொறியியல் துறைக்கும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




JAFFNA'S FIRST HOUSING &
CONSTRUCTION EXHIBITION
JAFFNA
HOUSING & CONSTRUCTION
EXHIBITION
2023
யாழ் மண்ணில் முதல் முறையாக
யாழ் வீடமைப்பு மற்றும் கட்டுமான
கண்காட்சி 2023
FOR ENQUIRY CALL MINHAJ 077 888 2700
கட்டிட நிர்மாணம், வீடமைப்பு
மற்றும் வீட்டு உபகரணங்கள்
தொடர்பான அனைத்து விடயங்களும்
ஒரே கூரையின் கீழ்.
அனைவரையும் அழைக்கின்றோம்
15 16 17
SEPTEMBER
MUTTRAWELI GROUNDS, JAFFNA
Official Sponsor
Hayleys
Aventura
Innovative Solutions
Organizer
Iyngaran Media
Solution (Pvt) Ltd.
In Association
CCI
Chamber of Construction
Industry of Sri Lanka
Radio Partner
Print Media Partner
Digital Media Partner
வீரகேசரி
காலைக்கதிர்
Kalaikkathir

# பிரேசில் தென்மாநிலத்தை புரட்டிப் போட்ட புயல் 21 பேர் உயிரிழப்பு - 60 நகரங்கள் பாதிப்பு

பிரேசில் நாட்டின் தென்மாநிலம் ரியோ கிராண்ட் டோ சுல்-ஐ பயங்கரமான புயல் தாக்கியதில் 21 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். புயல் காரணமாக இடைவிடாத கனமழை பெய்ததால் 60 நகரங்கள் பாதிக்கப்பட்டன. 1,650 பேர் வீடுகளை இழந்து தவித்து வருகின்றனர்.

ரியோ கிராண்ட் டோ சுல் மாநில கவர்னர் எட்வர்டோ லைட் கூறுகையில் ""பருவநிலை மாற்றம் காரணமாக மாநிலத்தில் உயிர்ப்பலி அதிகரித்து வருகிறது. இந்த புயலால் 60 நகரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இது வெப்பம் மண்டல சூறாவளியாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

பெண் ஒருவர் மீட்பு பணியின்போது வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டார். கயிறு கட்டி அந்த பெண்ணை மீட்டபோது, கயிறு அறுந்து ஆற்று வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டார். அவரை காப்பாற முடியவில்லை"" என்றார்.

ரியா கிராண்ட் டோ சுல் பகுதியில் ஆற்றங்கரையோரம் வசித்து வந்த மக்கள், மொட்டை மாடியில் இருந்து உதவி கேட்பது போன்ற வீடியோ காட்சி நெஞ்சை பதைபதைக்க செய்ததாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன் ஜூன் மாதம் இதுபோன்று பயங்கர சூறாவளி புயல் ஏற்பட்டது. அப்போது 16 பேர் உயிரிழந்தனர். 40 நகரங்கள் பாதிக்கப்பட்டன.



# காளான் சூப்பில் மிதந்த எலி



இங்கிலாந்தின் கென்ட் நகரை சேர்ந்தவர் சாம் ஹேவர்டு. இவரது காதலி எமிலி இவர் அங்குள்ள சீன உணவு விடுதியில் சூப் ஆர்டர் செய்து அதனை வீட்டுக்கு கொண்டு வந்து காளான் நூடுல்ஸ் சூப் என காதலருக்கு கொடுத்தார்.

அதை ஆசையாக பருக தொடங்கிய சாம் சூப்பில் ஏதோ ஒன்று நகர்வதை கவனித்தார். முதலில் அது ஒரு பெரிய காளானாக இருக்கலாம் என நினைத்தார். ஆனால் அதில் இருந்து ஒரு பெரிய வால் மேலே வந்தது. இதனால் மிரண்டு போன அவர் அது எலி என்பதை கண்டார்.

உடனே அதை வீடியோ எடுத்து சம்பந்தப்பட்ட உணவு விடுதிக்கு போன் செய்து விசாரித்தார். அப்போது அந்த உணவு விடுதி ஊழியர்கள் அந்த சூப் எங்களது உணவகத்தில் தயாரித்தது இல்லை என கூறினர். இதற்கிடையே சூப்பில் எலி மிதந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# மதபோதகர் மீது துப்பாக்கிச்சூடு

பாகிஸ்தானில் சிறுபான்மையினர் மற்றும் அவர்களின் வழிபாட்டு தலங்களை குறிவைத்து அவ்வப்போது தாக்குதல் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன.

கடந்த மாதம் அந்நாட்டின் பஞ்சாப் மாகாணம் பைசலாபாத் மாவட்டம் ஜரன்வாலா நகரின் ஐசாநஹ்ரி பகுதியில் கிறிஸ்தவ மத வழிபாட்டு தலங்கள், வீடுகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்நிலையில், அந்நாட்டின் லாகூர் மாகாணம் பைசலாபாத் மாவட்டம் ஜரன்வாலா தாசில் பகுதியில் உள்ள கிறிஸ்தவ மத வழிபாட்டு தலத்தில் மதபோதகாராக செயல்பட்டு வருபவர் எலேசர் விக்கி. இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழிபாட்டு தலத்திற்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தார்.

அப்போது, அவர் மீது ஒரு நபர் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு தப்பியோடினார். துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த மதபோதகர் விக்கியை மீட்ட அக்கம்பக்கத்தினர் அவரை மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். அவருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சூடானில் உள்நாட்டு போரால் 48 லட்சம் பேர் இடம்பெயர்ந்தனர்

சூடானில் ராணுவத்தினருக்கும், ஆர்.எஸ்.எப். எனப்படும் துணை ராணுவத்துக்கும் இடையே கடந்த ஏப்ரல் மாதம் கலவரம் வெடித்தது. இந்த உள்நாட்டு போரில் இது வரை 3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். சுமார் 6 ஆயிரம் பேர் படுகாயம் அடைந்தனர். ஏராளமானோர் பாதுகாப்பு கருதி உள்நாட்டிலும், வெளி நாடுகளிலும் இடம்பெயர்ந்தனர்.

அந்தவகையில் சூடான் உள்நாட்டு போரால் சுமார் 48 லட்சம் பேர் தங்களது சொந்த பகுதிகளை விட்டு இடம்பெயர்ந்ததாக ஐ.நா.வின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

சூடானில் ராணுவத்தினருக்கும், ஆர்.எஸ்.எப்.



எனப்படும் துணை ராணுவத்துக்கும் இடையே கடந்த ஏப்ரல் மாதம் கலவரம் வெடித்தது. ஏராளமானோர் பாதுகாப்பு கருதி உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இடம்பெயர்ந்தனர்.

# எண்ணெய் உற்பத்திக்கு கட்டுப்பாடு ரஷ்யா - சவுதி அரேபியா அறிவிப்பு




இந்த ஆண்டு இறுதிவாக்கில் தங்களது கச்சா எண்ணெய் உற்பத்தியில் நாளொன்றுக்கு 13 லட்சம் கோடி பரலைக் குறைக்க ரஷ்யாவும், சவுதி அரேபியாவும் ஒப்புக் கொண்டுள்ளன. இதற்கான அறிவிப்பை இரு நாடுகளும் நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிட்டன.

சர்வதேச சந்தையில் குறைந்து வரும் கச்சா எண்ணெயின் விலையை அதிகரிக்கும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதனால், பல்வேறு நாடுகளில் பொதுமக்கள் பயன்படுத்தும் பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

இது குறித்து சவுதி அரேபிய எரிசக்தித் துறை உயரதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி அந்த நாட்டு அரசுக்குச் சொந்தமான எஸ்.பி.ஏ. செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

சர்வதேச கச்சா எண்ணெய்ச் சந்தையின் நிலைத்தன்மையையும், சமநிலையையும் பாதுகாப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு (ஒபெக்) எடுத்து வருகிறது. அதன் ஒருபகுதியாக, தினசரி கச்சா எண்ணெய் உற்பத்தியில் மேலும் 13 லட்சம் பரலைக் குறைக்கும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை அமலுக்கு வந்த பிறகும், கச்சா எண்ணெய்ச் சந்தை நிலவரத்தை சவுதி அரேபிய அரசு உன்னிப்பாக கவனித்து வரும். அதன் அடிப்படையில் புதிய முடிவுகள் எடுக்கப்படும் என்று அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ரஷ்ய துணைப் பிரதமரும், அந்த நாட்டின் எரிசக்தித் துறை முன்னாள் அமைச்சருமான அலெக்ஸாண்டர் நோவாக் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'சர்வதேச கச்சா எண்ணெய்ச் சந்தையின் நிலைத்தன்மை மற்றும் சமநிலையை உறுதி செய்வதற்கான ஒபெக் நடவடிக்கைகளுக்கு வலுச் சேர்க்கும் வகையில், தினசரி கச்சா எண்ணெய் உற்பத்தியில் 13 கோடி பரலைக் குறைக்க ஒப்புக்கொண்டுள்ளோம்.

தற்போது தினமும் செயல்படுத்தப்பட்டு வரும் 3 லட்சம் பரல் கச்சா எண்ணெய் உற்பத்திக் குறைப்பு நடவடிக்கையும் தொடரும் என்று தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்ததைத் தொடர்ந்து அந்த நாட்டின் மீது அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் மிகக் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்தன. இதனால் பொருளாதார வீழ்ச்சியைத் தவிர்ப்பதற்காக தனது கச்சா எண்ணெயை இந்தியா, சீனா போன்ற நாடுகளுக்கு தள்ளுபடி விலையில் ஏற்றுமதி செய்ய வேண்டிய நிலைக்கு ரஷ்யா தள்ளப்பட்டது.

இதனால் சர்வதேச நிலையில் கச்சா எண்ணெயின் விலை சரிந்தது. இது, சவுதி அரேபிய உள்ளிட்ட அனைத்து எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் ஏற்றுமதி வருவாயையும் பாதித்தது. இந்த நிலையில், உற்பத்தியைக் குறைப்பதன் மூலம் சந்தையில் கச்சா எண்ணெயின் விலையை உயர்த்த கடந்த ஆண்டே முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இருந்தாலும், சீனாவின் கச்சா எண்ணெய் தேவை மிகக் குறைவாக இருந்ததால் விலை உயரவில்லை.

இந்தச் சூழலில், இந்த ஆண்டின் பிற்பகுதியில் கச்சா எண்ணெய் தினசரி உற்பத்தியைக் குறைக்கவிருப்பதாக ரஷ்யாவும், சவுதி அரேபியாவும் கூட்டாக அறிவித்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (04)

# ராகுல் காந்திக்கு மீண்டும் எம்.பி. பதவி உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்



அவதூறு வழக்கில் விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையை உச்ச நீதிமன்றம் நிறுத்தி வைத்துள்ளதைத் தொடர்ந்து, காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்திக்கு மீண்டும் எம்.பி. பதவி வழங்கப்பட்டது. இதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கர்நாடகத்தின் கோலாரில் கடந்த மக்களவைத் தேர்தலின்போது நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசிய ராகுல் காந்தி, 'எப்படி எல்லாத் திருடர்களின் பெயரும் மோடி என்று முடிகிறது?' எனப் பிரதமர் நரேந்திர மோடியை மறைமுகமாக விமர்சித்தார்.

இதைத்தொடர்ந்து, மோடி சமூகத்தினரை அவமதிக்கும் வகையில் பேசியதாக ராகுல் காந்தி மீது தொடரப்பட்ட அவதூறு வழக்கில் அவருக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து சூரத் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதைத் தொடர்ந்து, மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின்படி கேரளத்தின் வயநாடு தொகுதி எம்.பி.யான ராகுலின் பதவியைப் பறித்து மக்களவை செயலகம் உத்தரவிட்டது.

சூரத் அமர்வு நீதிமன்றத்தின் உத்தரவுக்கு எதிராக ராகுல் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்கள் மாவட்ட நீதிமன்றம் மற்றும் குஜராத் உயர் நீதிமன்றங்களில் தள்ளுபடி செய்யப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, உச்ச நீதிமன்றத்தில் அவர் முறையிட்டார். மனுவை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள், 'அரசியலில் தூய்மை தேவைப்படும் இன்றைய சூழலில் வார்த்தைப் பிரயோகத்தில் ராகுல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்'என அறிவுறுத்தி, கடந்த மாதம் 4ஆம் திகதி வெளியிட்ட உத்தரவில் அவரது தண்டனையை நிறுத்திவைத்தனர்.

இதையடுத்து, ராகுல் காந்திக்கு மீண்டும் எம்.பி. பதவி வழங்கி மக்களைவைச் செயலகம் கடந்த மாதம் 7 ஆம் திகதி அறிவிப்பு வெளியிட்டது.

இதை எதிர்த்து லக்னௌவைச் சேர்ந்த வழக்குரைஞர் அசோக் பாண்டே உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக் கல் செய்துள்ளார். அவர் தாக்கல் செய்துள்ள மனுவில், 'மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 102 பிரிவின்படி மேல்முறையீட்டில் தீர்ப்பாகும் வரை குற்ற தண்டனை அடிப்படையிலான தகுதி நீக்கம் செல்லுபடியில் இருக்கும். அந்த வகையில், ராகுல் காந்தியின் தண்டனை நிறுத்தி மட்டுமே வைக்கப்பட்டுள்ள சூழலில் தகுதி நீக்கம் செய்யப்பட்ட நபருக்கு மீண்டும் எம்.பி. பதவியைத் திருப்பி வழங்குவதற்கு மக்களைவைத் தலைவருக்கு அதிகாரமில்லை' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவில் மக்களவைத் தலைவர், மத்திய அரசு, இந்திய தேர்தல் ஆணையம் ஆகியோர் எதிர்மனு தாரர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், ராகுல் காந்தி எம்.பி.யாக இருந்து வரும் வயநாடு தொகுதி காலியாக உள்ளது எனத் தெரிவித்து, அதனை நிரப்ப தேர்தல் நடத்துவதற்கான அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிட அறிவுறுத்தல்கள் வழங்கவும் மனுவில் கோரப்பட்டுள்ளது. (04)

## சனாதன பேச்சு - உத்தரப் பிரதேசத்தில் உதயநிதி ஸ்டாலின் மீது வழக்குப்பதிவு!



சனாதனம் தொடர்பாக தமிழக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசிய விடயம் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இவரது பேச்சுக்கு பலரும் கண்டனத்தை தெரிவித்து வருகின்றனர்.

இதற்கிடையே அவர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதிக்கு, ஓய்வுபெற்ற நீதிபதிகள், எழுத்தாளர்கள் உள்ளிட்ட 262 பிரபலங்கள் சார்பில் கடிதம் அனுப்பப்பட்டு உள்ளது.

இந்த நிலையில், சனாதனப் பேச்சுத் தொடர்பாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மீது உத்தரபிரதேச மாநிலம் ராம்பூரில் உள்ள சிவில் லைன்ஸ் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் உதயநிதியின் கருத்துக்கு ஆதரவாகப் பேசிய கர்நாடக அமைச்சர் பிரியங் கார்கே மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

வழக்கறிஞர்கள் ஹர்ஷ் குப்தா மற்றும் ராம்சிங் லோதி ஆகியோரின் புகாரின் அடிப்படையில் இருவர் மீதும் பொலிசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். (04)



## இந்தியப் பிரதமரின் சிறப்புப் பாதுகாப்புப் படை இயக்குநர் அருண் குமார் சின்ஹா உயிரிழப்பு

பிரதமர் மோடியின் பாதுகாப்புக்கு பொறுப்பான சிறப்பு பாதுகாப்புக் குழுப் பிரிவின் (எஸ்.பி.ஜி) இயக்குநர் அருண்குமார் சின்ஹா 61 வயதில், உடல் நலக்குறைவால் இன்று உயிரிழந்தார்.

1988 ஆம் ஆண்டு கேரள கேடர் ஐ.பி.எஸ். அதிகாரியாக முதன்முதலில் தனது பணியைத் தொடங்கிய சின்ஹாவுக்கு சமீபத்தில் ஓராண்டுப் பணி நீடிப்பு வழங்கப்பட்டது.

இந்தியப் பிரதமர், முன்னாள் பிரதமர் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு முழுப் பாதுகாப்பையும் வழங்கும் பணி எஸ்.பி.ஜி யிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தியப் பிரதமரின் அலுவலகம், குடியிருப்பு, அவர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் மற்றும் சுற்றுப் பயணங்களின் போது எஸ்.பி.ஜி பாதுகாப்பை வழங்கி வருகிறது.

நாட்டில் நிலவும் பாதுகாப்பற்ற சூழல் மற்றும் பயங்கரவாதத்தினால் ஏற்படும் அச்சுறுத்தல்களைக் கருத்தில் கொண்டு, எஸ்.பி.ஜி குழு தங்களது பாதுகாப்பை நவீனமயமாக்கி, மேம்படுத்தும். அதுவே அவர்களது முக்கிய பணியாகும். (04)

# இந்தியா கூட்டணி ஒருங்கிணைப்புக் குழுவின் முதல் கூட்டம் வரும் 13ஆம் திகதி டில்லியில்!

இந்தியா கூட்டணி ஒருங்கிணைப்புக் குழுவின் முதல் கூட்டம் வருகிற 13 ஆம் திகதி டில்லியில் நடைபெறவுள்ளதாக சிவசேனை எம்.பி. சஞ்சய் ரௌத் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க.வை எதிர்கொள்வதற்காக 28 எதிர்க்கட்சிகள் இணைந்து 'இந்தியா' என்ற பெயரில் கூட்டணியை அமைத்துள்ளன. அக்கூட்டணியின் முதல் கூட்டம் பிகார் தலைநகர் பாட்னாவிலும், இரண்டாவது கூட்டம் பெங்களூரிலும் 3 ஆவது கூட்டம் கடந்த முதலாம் திகதி மும்பையிலும் நடைபெற்றது.

காங்கிரஸ், திமுக, திரிணமூல், ராஷ்ட்ரீய ஜனதா தளம், ஆம் ஆத்மி உள்பட 28 எதிர்க்கட்சிகள் இதில் கலந்துகொண்டன.

இதில் தொகுதிப் பங்கீட்டுப் பேச்சு வார்த்தையை வரும் 30 ஆம் திகதிக்குள் இறுதி செய்வது உள்பட பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

இந்தியா கூட்டணியில் 14 பேர் கொண்ட ஒருங்கிணைப்புக்குழு இறுதி செய்யப்பட்டுள்ளது. குழுவில் காங்கிரஸ் பொதுச் செயலர் கே.சி.வேணுகோபால், தேசியவாத காங்கிரஸ்தலைவர் சரத் பவார், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, பிகார் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ், திரிணமூல் காங்கிரஸின் அபிஷேக் பானர்ஜி, சிவசேனையின் சஞ்சய் ரௌத், ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன், ஆம் ஆத்மியின் ராகவ் சதா, சமாஜவாதி கட்சி மூத்த தலை வர்



ஜாவத் அலி கான், ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் லலன் சிங், இந்திய கம்யூனிஸ்ட் பொதுச் செயலர் டி.ராஜா, தேசிய மாநாட்டு கட்சித் தலைவர் ஒமர் அப்துல்லா, மக்கள் ஜனநாயக கட்சித் தலைவர் மெஹபூபா முஃப்தி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். மேலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து மேலும் ஒருவர் சேர்க்கப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்தியா கூட்டணியின் முதல் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வருகிற 13 ஆம் திகதி டில்லியில் நடைபெறவுள்ளதாக சிவசேனை (உத்தவ் தாக்கரே தரப்பு) எம்.பி. சஞ்சய் ரௌத் தெரிவித்துள்ளார். டில்லியில் தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார் இல்லத்தில் வைத்து இந்த கூட்டம் நடைபெறும் என்றும் அவர் கூறியுள்ளார். (04)

# ஒன்ராறியோ மாநகர அமைச்சர் ஸ்டீவ் கிளார்க் ராஜினாமா



ஒன்ராறியோ மாநகர விவகாரங்கள் மற்றும் வீட்டு வசதித்துறை அமைச்சர் ஸ்டீவ் கிளார்க், கிரீன்பெல்ட் நில மாற்றங்களை தனது அமைச்சகம் கையாண்டது குறித்த பல விசாரணைகளைத் தொடர்ந்து அமைச்சரவையில் இருந்து ராஜினாமாச் செய்துள்ளார்.

ஒன்ராறியோவின் ஆணையர் அவரது நடத்தையை விசாரித்து, கிளார்க்கை கண்டிக்க பரிந்துரைத்ததை அடுத்து அவரது ராஜினாமா இடம்பெற்றுள்ளது.

சில வாரங்களுக்கு முன்னர், மாகாணத்தின் தலைமைக் கணக்காய்வாளர், வீட்டுவசதி மேம்பாட்டிற்காக எந்தெந்த நிலங்கள் திறக்கப்பட வேண்டும் என்பதைத் தேர்ந்தெடுக்கும் செயல்முறையானது, பில்லியன் கணக்கான டொலர்களை ஈட்டக்கூடிய நன்கு இணைக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்பாட்டாளர்களின் ஒரு சிறிய குழுவால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்பதைக் கண்டறிந்தார்.

திங்கட்கிழமை காலை ஒன்ராறியோ பிரீமியர் டக் ஃபோர்டுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் கிளார்க், ஒன்ராறியோ மக்களுக்காக அதிக வீடுகளைக் கட்டுவதற்கான ஆணையை நிறைவேற்ற முயற்சிப்பதாக கூறியிருந்தார்.

இந்தத் தவறுகள் மீண்டும் நிகழாமல் இருக்க நான் இந்த பதவியில் செயற்படமுடியும், சரியான செயல்முறையை உருவாக்க முடியும் என்பது எனது ஆரம்ப எண்ணம் இருந்தபோதிலும், எனது இருப்பானது செய்யப்பட வேண்டிய முக்கியமான வேலைகளில் இருந்து மேலும் கவனச்சிதறலை மட்டுமே ஏற்படுத்தும் என்பதை நான் உணர்கிறேன். என்ன நடந்தது என்பதற்கு நான் பொறுப்பேற்க வேண்டும், என்று அவர் சமூகவலைத் தளப் பதிவொன்றையும் இட்டிருந்தார்.

எனவே, மாநகர விவகாரங்கள் மற்றும் வீட்டுவசதி அமைச்சர் பதவியில் இருந்து எனது ராஜினாமாவை ஏற்கவும். லீட்ஸ் - கிரென்வில்லே - தவுசண்ட் தீவுகள் மற்றும் ரைடோ ஏரிகளுக்கான எம்.பி.பி. ஆக எனது தொகுதிகளுக்கு தொடர்ந்து சேவை செய்வேன், எனவும் அவர் தெரிவித்திருந்தார். (04)



## கனடாவில் கார் காப்புறுதி கட்டணங்கள் அதிகரிப்பு

கனடாவில் சில வகைக் கார்கள் அதிக அளவில் களவாடப்படுவதாகவும் இதன் காரணமாக காப்புறுதி கட்டணத் தொகை அதிகரித்துச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. Rates.ca என்ற இணையத் தளம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

சில வகைக் கார்களுக்கான காப்புறுதிக் கட்டணங்கள் 25 முதல் 50 வீதம் வரையில் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் இந்த மாற்றம் பதிவாகியுள்ளது.

குறிப்பாக, அதிக எண்ணிக்கையில் களவாடப்படும் கார் மொடல்களுக்கு இவ்வாறு காப்புறுதிக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கார்கள் அதிக அளவில் களவாடப்படும் சில பிராந்தியங்களிலும் இவ்வாறு காப்புறுதிக் கட்டணத் தொகையானது உயர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடாவில் அதிக அளவு களவாடப்படும் வாகனமாக Honda CR-V வாகனம் பட்டியலிடப்பட்டுள்ளது. எனவே, இந்த வகை வாகனத்திற்கான காப்புறுதிக் கட்டணங்கள் அதிகம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (04)



## ஆப்கானிஸ்தான் போராடித் தோல்வி சூப்பர் 4 க்கு முன்னேறியது இலங்கை!

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் லாகூரில் நடைபெற்ற ஆறாவது ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி துடுப்பாட்டத்தைத் தேர்வுசெய்தது. சூப்பர் 4 சுற்றுக்குத் தகுதிபெற இலங்கைக்கு இந்த வெற்றி மட்டுமே போதுமானதாக இருந்தது. அதே சமயம், ஆப்கானிஸ்தானுக்கு ஒரு பெரிய இடைவெளியுடன் கூடிய வெற்றி தேவைப்பட்டது.

இலங்கையின் ஆரம்ப வீரர்கள் கருணாரத்ன - நிசங்க இணை நல்ல தொடக்கம் அமைத்துக் கொடுத்தனர். இடையில் விக்கெட்டுகள் அடுத்தடுத்து வீழ்த்தப்பட்டாலும், குசல் மென்டிஸ் நிலைத்து விளையாடி 84 பந்துகளில் 92 ஓட்டங்களைச் சேர்த்தார். வெல்லாலகே - தீக்ஷன இணை கடைசிக் கட்டத்தில் பொறுப்புடன் விளையாடி அணியை சரிவில் இருந்து மீட்க, 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 291 ஓட்டங்களை இலங்கை பெற்றது.

ஆப்கானிஸ்தான் தரப்பில் குல்புடின் நைம் 4 விக்கெட்டுகள் கைப்பற்றினார்.

37.4 ஓவர்கள் அல்லது அதற்கும் குறைவான ஓவர்களில் 292 ஓட்டங்களை எடுத்தால் சூப்பர் 4 சுற்றுக்கு முன்னேறலாம் என்ற நிலையில் ஆப்கானிஸ்தான் களமிறங்கியது. ஆரம்ப வீரர்கள் குர்பாஸ், ஸட்ரான் இருவரும் ராஜிதவின் பந்து வீச்சில் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். விக்கெட்டுகள் சரிந்தாலும் அதிரடியாக விளையாடுவதை ஆப்கானிஸ்தான் வீரர்கள் கைவிடவில்லை.

6ஆவது விக்கெட்டுக்கு கப்டன் ஷய்டியுடன் இணைந்த மொகமட் நபி முல்தானில் சிக்ஸர் மழை பொழிந்தார். பத்திரன வீசிய 23வது ஓவரில் 2 பவுண்டரி ஒரு சிக்ஸருடன் 20 ஓட்டங்களைக் குவித்ததும் ஆட்டம் ஆப்கானிஸ்தான் பக்கம் திரும்பியது. நபி, 24 பந்துகளில் அரைச்சதம் அடித்தார். ஆப்கானிஸ்தான் வீரர் ஒருவர் அடித்த ஒருநாள் போட்டிகளின் அதிவேக அரைசதம் இதுவாகும்.

37.4 ஓவர்களில் 295 ஓட்டங்களை எடுத்தால் சூப்பர் 4 சுற்றுக்கு முன்னேறலாம் என்ற நிலையில் கடைசி விக்கெட்டுக்கு ரஷித் கானுடன் இணைந்தார் பரூக்கி. இந்தக் கணக்குகள் எதுவும் புரியாமல் களமிறங்கிய பரூக்கி, ரஷித் கானுக்கு வாய்ப்புக் கொடுக்காமல் இரண்டு பந்துகளை வீணடித்தார். சூப்பர் 4 சுற்றுக்கு முன்னேற ஒரு பந்தில் சிக்ஸர் தேவை என்கிற நிலையில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார் பரூக்கி.

பரபரப்பான ஆட்டத்தில் 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற நடப்பு சம்பியன் இலங்கை அணி சூப்பர் 4 சுற்றுக்கு முன்னேறியது.

இலங்கைத் தரப்பில் ராஜித 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். நெருக்கடியான நிலையில் 84 பந்துகளில் 92 ஓட்டங்கள் குவித்த குசல் மெண்டிஸ் ஆட்ட நாயகனாக அறிவிக்கப்பட்டார்.

இன்று ஆரம்பமாகும் சூப்பர் 4 சுற்று ஆட்டத்தில் பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகள் லாகூரில் மோதுகின்றன. (04)

## வங்கி வட்டி வீதங்களை உயர்த்த வேண்டாம் ஒன்றாரியோ மாகாண முதல்வர் கோரிக்கை



கனடாவின் வங்கி வட்டி வீதங்களை உயர்த்த வேண்டாம் என ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் கோரிக்கை விடுத்துள்ளார். இந்தக் கோரிக்கை தொடர்பில் போர்ட், மத்திய வங்கியின் ஆளுனர் ரிப் மக்கலத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

வட்டி வீத அதிகரிப்பினால் மகாண மக்களும் வர்த்தகர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மைய சில மாதங்களாக கனடிய மத்திய வங்கி, வட்டி வீதங்களை தொடர்ச்சியாக உயர்த்திச் செல்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

வட்டி வீத அதிகரிப்பு மக்கள் அனைவரையும் அழுத்தங்களக்கு உள்ளாக்கியுள்ளது என முதல்வர் போர்ட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வட்டி வீதங்களை அதிகரிக்க வேண்டாம் என ஏற்கனவே பிரிட்டிஷ் கொலம்பியாவின் முதல்வரான டேவிட் எபியும் கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (04)



## ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக தென்னாபிரிக்காவின் டி கொக் அறிவிப்பு!

உலகக் கிண்ணத் தொடருடன் ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக தென்னாபிரிக்காவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரும் விக்கெட் காப்பாளருமான குயிண்டன் டி கொக் அறிவித்துள்ளார்.

உலகக் கோப்பைக்கான தென்னாப்பிரிக்க அணி நேற்று அறிவிக்கப்பட்டது. இதில் குயிண்டன் டி கொக்கும் இடம் பெற்றுள்ளார். கடந்த 2021 இல் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்ற டி கொக், இதுவரையில் 140 ஒருநாள் ஆட்டங்களில் பங்கேற்று 44.85 சராசரியில் 5966 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதில் 17 சதங்களும் 29 அரை சதங்களும் அடங்கும். விக்கெட் காப்பாளராக இது வரையில் 183 பிடிகளையும் 14 ஸ்டம்பிங்குகளையும் செய்துள்ளார்.

கடந்த இரு உலகக் கோப்பையிலும் பங்கேற்ற டி கொக், 17 ஆட்டங்களில் 30 என்ற சராசரியில் 450 ஓட்டங்களைச் சேர்த்தார். 8 ஒருநாள் ஆட்டங்களுக்கு தென்னாபிரிக்க அணிக்கு கப்டனாகவும் இவர் செயல்பட்டுள்ளார். அவற்றில் நான்கில் அந்த அணி வெற்றி பெற்றது. (04)

# பிரான்ஸ், இலங்கை இந்திய வர்த்தகச் சங்க நிதியுதவியில் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு மின் அதிர்வு உபகரணம்



தெல்லிப்பழை, செப். 06

பிரான்ஸ், இலங்கை இந்திய வர்த்தகச் சங்கத்தின் நிதியுதவியில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு ஒரு கோடி பெறுமதியான மின் அதிர்வுச் சிகிச்சை உபகரணம் நேற்று வழங்கி வைக்கப்பட்டது

தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.எம்.றெமான்ஸ்,

தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையின் உளநல வைத்திய நிபுணர் பேராசிரியர் டொக்டர் எஸ்.சிவயோகன், பிரான்ஸ் இலங்கை இந்திய வர்த்தக சங்கத்தின் தலைவர் இராசையா சிறீ தரன், வைத்தியர்கள், அதிகாரிகள் பணியாளர்கள் எனப்பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (01)

## சாய்ந்தமருது தைபா அரபுக் கல்லூரியில் 8 மாணவிகளுக்கு பல்கலைக்கழக வாய்ப்பு



(ஏ.எஸ்.மௌலானா)

சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரியில் இருந்து இம்முறை 8 மாணவிகள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர் என்று கல்லூரி அதிபர் மௌலவி எஸ்.எச்.ஆதம்பாவா மதனி தெரிவித்தார்.

தற்போது வெளியிடப்பட்டுள்ள க.பொ.த.உயர்தர பரீட்சை முடிவுகளின் பிரகாரம் பரீட்சைக்கு தோற்றிய 20 மாணவிகளுள் 19 பேர் அனைத்து பாடங்களிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இவர்களுள் 8 மாணவிகள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றிருப்பதுடன் ஒரு மாணவி மூன்று பாடங்களிலும் ஏ சித்திகளை பெற்றுள்ளார். கடந்த காலங்களை விட இம்முறை நிறைய ஏ சித்திகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இக்கல்லூரியில் கடந்த முறை 10 மாணவிகள் பரீட்சைக்குத் தோற்றி, 4 மாணவிகள் பல்கலைக் கழகங்களுக்கு தெரிவாகியிருந்தனர்.

2012 ஆம் ஆண்டு தொடக்கம் சாய்ந்தமருதில் இயங்கி வருகின்ற தைபா மகளிர் அரபுக் கல்லூரியில் இருந்து இதுவரை 38 மாணவிகள் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெற்றுள்ளனர் என்றும் அதிபர் எஸ்.எச்.ஆதம்பாவா தெரிவித்தார்.



## கிரிக்கெட் வீரர் சசித்ர கைது!

போட்டியைப் பணத்துக்குக் காட்டிக்கொடுப்பதற்கு யோசனையைக் கூறினார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ள இலங்கை கிரிக்கெட் வீரர் சசித்ர சேனநாயக்க, விளையாட்டு மோசடியைத் தடுக்கும் பொலிஸ் பிரிவில் இன்று ஆஜராகிய பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் அவர் அளுத்கடை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (03)




## ஓந்தாச்சிமடம் அரசடி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம்



(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஓந்தாச்சிமடம் அரசடி விநாயகர் ஆலய பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை கர்மாரம்பத்துடன் ஆரம்பமாக விருக்கிறது.

9 ஆம் திகதி சனிக்கிழமை எண்ணைய்க்காப்பு சாத்தும் நிகழ்வு காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை இடம் பெறும். தொடர்ந்து 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை சுபமுகூர்த்த வேளையில் மகா கும்பாபிஷேகம் இடம்பெற இருக்கின்றது.

தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று, 21ஆம் தேதி வியாழக்கிழமை 1008 சங்குகளுடன் கூடிய சங்காபிஷேகமும் வீதியுலாவும் இடம்பெறும்.

பிரதிஷ்டா பிரதம குரு சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்த மூர்த்திக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் கும்பாபிஷேக கிரியைகளை மேற்கொள்வார்கள் என்று ஆலய பரிபாலன சபையின் தலைவர் த.சற்குணானந்தன், செயலாளர் வி.காந்தகுமார் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

# கொழும்பில் திட்டமிட்டபடி போட்டிகள் ஆசிய கிரிக்கெட் சபை உறுதியளிப்பு!



சூப்பர் 4 சுற்றின் 5 ஆட்டங்களும் இறுதிப் போட்டியும் திட்டமிட்டபடி கொழும்பிலேயே நடைபெறும் என ஆசிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடர் இலங்கை மற்றும் பாகிஸ்தானில் நடைபெற்று வருகிறது. சமீப நாட்களில் இலங்கையின் பல்லகலே, கொழும்பு ஆகிய இடங்களில் கனமழை பெய்துவருகிறது.

இதனால், கொழும்பில் நடக்கவிருந்த சூப்பர் 4 சுற்றின் 5 ஆட்டங்களையும் இறுதிப் போட்டியையும் வேறு இடங்களில் நடத்த பாகிஸ்தான் மற்றும் இலங்கை கிரிக்கெட் சபைகள் கோரியிருந்தன.

இந்த நிலையில், ஹம்பாந்தோட்டையில் எஞ்சிய ஆட்டங்களை நடத்த முடிவெடுக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

இதனிடையே, திட்டமிட்டபடி கொழும்பிலேயே குறித்த போட்டிகள் நடைபெறும் என ஆசிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இதனால் அதிருப்தியடைந்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, ஆசிய கிரிக்கெட் சபையின் நிர்வாகக் குழுக் கூட்டத்தை உடனடியாகக் கூட்ட வேண்டும் எனத் தெரிவித்துள்ளது. மேலும், இதுகுறித்து ஆசிய கிரிக்கெட் சபையின் தலைவரான ஜெய் ஷாவிற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கடிதமும் எழுதியுள்ளது.

இதுகுறித்து இலங்கை கிரிக்கெட்டின் தலைமை நிர்வாக அதிகாரி அஷ்லே டி சில்வா தெரிவித்தபோது, நிறைய ரசிகர்கள் கொழும்பில் போட்டிகளைப் பார்ப்பதற்கான ஏற்பாடுகளை ஏற்கனவே செய்துள்ளனர். மேலும், கடந்த சில நாட்களாக கொழும்பில் மழை பெய்யவில்லை. இதன் காரணமாக திட்டமிட்டபடி கொழும்பில் ஆட்டங்களை நடத்த ஆசிய கிரிக்கெட் சபை முடிவெடுத்துள்ளது என்றார்.

கடந்த பத்து ஆண்டுகளில், இலங்கையில் நடைபெற்ற 84 ஒருநாள் ஆட்டங்களில் 79 ஆட்டங்கள் முழுமையாக நடைபெற்றதாக டி சில்வா தெரிவித்துள்ளார். மேலும், கைவிடப்பட்ட ஐந்து ஆட்டங்களில், செப்டம்பர் மாதத்தில் கைவிடப்பட்ட ஒரே ஆட்டம் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டிதான் எனவும் அவர் குறிப்பிட்டார். (04)



# ஊழியர் சேமலாப நிதிக்கு பாதிப்பு ஏற்படாது - ரணில்

ஊழியர் சேமலாப நிதிக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊழியர் சேமலாப நிதிக்கு நூற்றுக்கு ஒன்பது வீதத்தை வழங்குவதாகவும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.


நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இது தான் தீர்மானித்தது அல்ல எனவும் மொட்டுக் கட்சி ஆட்சியில் இருந்தபோது அந்த அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரதமர் பதவி வேண்டாம் என மற்றவர்கள் ஒடிக்கொண்டிருந்த போது, தான் நாட்டைப் பொறுப்பேற்று முன்னோக்கிக் கொண்டு சென்றுள்ளதாகவும் இதன்போது அவர் தெரிவித்துள்ளார். (க)




# நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடலின் கட்டுரைப் போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வு




நல்லூர் உற்சவத்தினை முன்னிட்டு நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடலினால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டிகளின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 க்கு, நல்லூர் பூங்காவன உற்சவ தினத்தன்று ,நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த நிகழ்வில் பரிசில் பெறும் மாணவ மாணவியர் கலாசார உடையுடன் வருகை தருமாறு சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் நிர்வாகத்தினர் அறிவித்தல் விடுத்துள்ளனர். (க)

# எனது மகனை மீட்டுத் தாருங்கள்! கண்ணீர் மல்க தந்தை கோரிக்கை





இலங்கை இராணுவத்தால் பிடித்துச் செல்லப்பட்ட எனது மகன் சிறைச்சாலைக்குள் இருப்பதற்கான ஆதாரங்கள் ஊடகங்கள் மூலம் இரண்டு தடவைகள் வெளிவந்தபோதும் பதினேழு ஆண்டுகள் கடந்தும் இதுவரையும் எனது மகனைப் பார்க்க முடியவில்லை என கவலை வெளியிட்ட தந்தையார், தான் இறப்பதற்கு முன் தன் மகனைப் பார்க்க உரிய தரப்புக்கள் உதவ வேண்டும் என கண்ணீர் மல்கக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

கல்வியங்காட்டில் உள்ள இல்லத்தில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அந்தத் தந்தையான சுந்தரலிங்கம் அருணகிரிநாதர் இவ்வாறு கோரினார்.

2006 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் 25 ஆம் திகதி நல்லூர் அரசடி இராணுவச் சோதனைச் சாவடியில் இராணுவத்தினால் எனது மகன் அருணகிரிநாதன் சுதன் பிடித்துச் செல்லப்பட்டார். அதன் பின்னர் சில காலம் எனது மகனை இராணுத்தினர் வைத்திருந்ததை எமது உறவினர்கள், நண்பர்கள் பலரும் கண்டு எனக்குத் தெரியப்படுத்தியிருந்தனர்.

குறித்த விடயத்தைப் பல்வேறு தரப்பினருக்கும் தெரியப்படுத்தியபோதும், அப்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துப் பேசியபோதும், 48 பேர் கொண்ட கைதிப்பட்டியலில் எனது மகனும் இருப்பதை உறுதிப்படுத்திய நிலையில் மகனின் விடுதலையைக் கோரியபோதும் அது சாத்தியப்படவில்லை.

"நாங்கள் நிரபராதிகள் விடுதலைக்கு உதவுங்கள்! பூசாவில் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் அமைச்சர்களிடம் வேண்டுகோள்" எனும் தலைப்பில் 2007 செப்டம்பர் 8 ஆம் திகதி தினக்குரல் பத்திரிகையில் வெளியான செய்தியில் உள்ள புகைப்படத்தில் எனது மகனும் சிறைக்குள் இருப்பது தெரிய வந்தது. மேலும் தினக் குரலில் வெளியான செய்தியின்படி, அப்போது இருந்த அமைச்சர் ராஜித சேனராத்ன பிரதி அமைச்சர்களான பி.ராதாகிருஸ்ணன், கே.ஏ.பாயிஸ் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், உள்ளிட்ட பலரும் பூசா முகாமில் கைதிகளைப் பார்வையிட்டனர் என்றுள்ளது.

இது தொடர்பில் தற்போதும் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட அதிகாரிகள் உண்மை நிலையைத் தெளிவுபடுத்த வேண்டும்.

சிறைச்சாலையில் இருந்து பரீட்சை எழுதும் கைதிகள் தொடர்பாக மேலுமொரு இணைய ஊடகமொன்றில் தற்போது வெளியான புகைப்படத்தில் எனது மகனும் அங்கு இருப்பது அறியவந்தது. இவ்வாறு எனது மகன் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் 0776323036 என்ற இலக்கம் ஊடாக தொடர்பு கொள்ளுங்கள்.

எனது மகன் பற்றிய விடயங்களைப் பெற காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம், மனித உரிமைகள் ஆணைக்குழு, சிறைச்சாலைகள் என இதுவரை பல இடங்களுக்கு சென்றபோதும் உரிய பதில் கிடைக்கவில்லை.

அண்மையில் காணாமலாக்கப்பட்டவர்களின் அலுவலகம் குறிப்பிட்ட சிலரைக் கண்டுபிடித்ததாக தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் எனது மகனை கண்டுபிடித்து தர வேண்டும், என்று அவர் கோரியுள்ளார். (01)

# நிந்தவூரில் சமுர்த்தி வங்கி 6 நாள் பயிற்சிச் செயலமர்வு





(எம்.எப்.நவாஸ்)

சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச்சங்களின் கணிணிமயப்படுத்தலுக்கான மென்பொருள் மேம்படுத்தல் மற்றும் எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்கொண்டு செல்லும் வகையிலான ஆறு நாள் பயிற்சிச் செயலமர்வு, அண்மையில் நிந்தவூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இப்பயிற்சிச் செயலமர்வில் வளவாளராக சிரேஸ்ட சமுர்த்தி முகாமையாளர் எம்.டி.எம்.உஸைன் கலந்து கொண்டார்.

நிந்தவூர், அட்டாளைச்சேனை பிரதேச செயலக சமுர்த்தி வங்கி, வங்கிச்சங்கம், மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி கட்டுப்பாட்டுச்சபை உறுப்பினர்கள் என பல்வேறு தரப்பினரும் இதில் கலந்துகொண்டனர்.

# பொலிஸ் தினத்தை முன்னிட்டு யாழில் சர்வ மத ஆராதனைகள்!







இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 157 வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு யாழ் மாவட்டத்தில் மதத்தலங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழிபாடுகள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் சென் ஜேம்ஸ் தேவாலயத்திலும், காங்கேசன்துறை கந்தசுவாமி ஆலயத்திலும், யாழ் நகர் ஜும்மா பள்ளிவாசலிலும் பிரார்த்தனைகள் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த பிரார்த்தனைகளில் யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத், அதிகாரிகள் மற்றும் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் கலந்துகொண்டனர். (க)



# கடல் வளங்களை பாதுகாத்தல் விழிப்புணர்வுச் செயற்றிட்டம்

"கடல் வளங்களை பேண்தகு முறையில் பாதுகாத்தல்" எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வுச் செயற்திட்டமும், பயிற்சிச் செயலமர்வும் இன்று இடம்பெற்றன.

குறித்த நிகழ்வு மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 10 மணியளவில் பூநகரி பிரதேச சபை மண்டபத்தில் ஆரம்பமானது.

சவதேச கடற்கரையோர சுத்திகரிப்பு வாரத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த நிகழ்வில், கடல் சூழல் பாதுகாப்பு அதிகார சபை, தேசிய உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்களால் விழிப்புணர்வுப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வில் பூநகரி பிரதேச சபைச் செயலாளர் தயாபரன், மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் மற்றும் ஊழியர்கள், பூநகரி கடல் தொழில் சங்கச் சமாசத் தலைவர் ஜோசப் பிரான்சிஸ், கடல் தொழில் சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (02)

# காரைநகர் தொழில்பயிற்சி நிலையத்தில் விரைவுச் சேவை உணவகப் பயிற்சிகள்!






உலகப்புகழ்பெற்ற விரைவுச் சேவை வர்த்தக உணவகங்களில் பணிக்கு அமர்த்தக்கூடிய வகையில் மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்கான கற்கைகள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காரைநகரில் இயங்கிவரும் தொழில்பயிற்சி நிலையத்தில் இதற்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதுடன், பயிற்சியை மேற்கொள்ளத் தேவையான முழுமையான சமையலறை வசதிகள் பீட்சா ஹட் நிறுவனத்தின் அனுசரணையில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இதன் அங்குரார்ப்பண வைபவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இதில், தொழில்பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், பீட்சா ஹட், யு-லீட் மற்றும் சேவாலங்கா ஆகியவற்றின் பிரதிநிதிகள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

காரைநகர் தொழில்பயிற்சி நிலையத்தில் ஹோட்டல் முகாமைத்துவ கற்கைநெறி முழு அளவில் இடம்பெறுவதுடன், அதனுடன் இணைந்ததாக விரைவுச் சேவை உணவகப் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

இங்கு பயின்ற பலர் யாழில் முன்னணி ஹோட்டல்கள் உட்பட பல உணவகங்களில் வேலை செய்கின்றனர்.

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள விரைவுச் சேவை உணவகப் பயிற்சிகள் மேலும் பலருக்கு ஹோட்டல் முகாமைத்துவத் துறையில் வேலைவாய்ப்பை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

16 முதல் 25 வயதுக்கு உட்பட்டவர்கள் இந்த கற்கைநெறியைத் தொடர விரும்பின், காரைநகரில் அமைந்துள்ள தொழில்பயிற்சி நிலையத்துடன், 0212227949, 0212211793 எனும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்புகொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (01, க)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.09.2023இல் வெளியிடப்பெற்றது.